

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.12.2024) தலைமைச் செயலகத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, புதுதில்லியில் 30.11.2024 அன்று நடைபெற்ற இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் கூட்டமைப்பு சார்பில் FICCI Turf 2024 – 14வது சர்வதேச விளையாட்டு கருத்தரங்கில் 2024–ஆம் ஆண்டிற்கான இந்திய விளையாட்டு விருதுகள் வழங்கும் விழாவில், விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலமாக (Best State Promoting Sports) தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டு, அதற்கென வழங்கப்பட்ட விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். உடன் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உள்ளனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை, போச்சம்பள்ளி ஆகிய தாலுகாவிற்கு உட்பட்ட பகுதிகளில் புயல் மழை வெள்ளம் காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ள பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்தும் பாதிக்கப்பட்ட மக்களை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அங்கு மருத்துவ வசதிகள் குறித்தும் கேட்டறிந்தார். உடன் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ., ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ., கிருஷ்ணகிரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சில்பா பிரபாகர், மாவட்ட ஆட்சித் தலைவர் சரயு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இ.ஜி. சுகவனம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பி.முருகன், நரசிம்மன், மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாநில மகளிர் ஆணைய உறுப்பினர் மருத்துவர் மாலதி நாராயணசாமி, மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன், துணை செயலாளர்கள் சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.12.2024) சென்னை, வால்டாக்ஸ் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளின் கீழ், 1,383 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அடிக்கல் மற்றும் திறப்பு விழாவில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்ட புகைப்படக் காட்சியை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு. மகேஷ் குமார், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் காகர்லா உஷா, எரிசக்தி துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பீலா வெங்கடேசன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ்.பிரபாகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.12.2024) தலைமைச் செயலகத்தில், திராவிடர் கழக பகுத்தறிவாளர் கழகத்தின் மாநில துணைத் தலைவர் முனைவர் நா. சுலோசனா சந்தித்து, தான் எழுதிய "திரைவானில் கலைஞர்" என்ற புத்தகத்தை வழங்கி, வாழ்த்து பெற்றார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.12.2024) திரைப்பட நடிகர் சிவகார்த்திகேயன் சந்தித்து ஃபெஞ்சல் புயல் கனமழையைத் தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு மேற்கொண்டு வரும் மீட்பு மற்றும் நிவாரண பணிகளுக்கு துணை நிற்கும் வகையில் "முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு" 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.



பெஞ்சல் புயலில் சிக்கி, அதிகமாக பாதிக்கப்பட்ட பகுதியான, விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணைநல்லூர் ஊராட்சி ஒன்றியம், இருவேல் பட்டு, அரசூர், ஆலங்குப்பம் ஆகிய ஊராட்சிகளில், விவசாய நிலங்கள், சாலைகளில் மண் அரிப்பு, மழைநீர் புகுந்த வீடுகள் ஆகிய பகுதிகளுக்குச் சென்று பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்தார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் வசந்தம் கார்த்திகேயன், த.உதயசூரியன், ஏ.கே.மணிக்கண்ணன், நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்கள், பொதுப்பணித்துறை பொறியாளர்கள் மற்றும் கழகத் தோழர்கள், ஊராட்சி பொதுமக்கள் ஆகியோர் இருந்தனர்.

### கடலூர் மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்டு

# முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு நிவாரணப் பொருட்கள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

கடலூர், டிச.6 -

கடலூர் மாவட்டத்தில் ஃபெஞ்சல் புயல் மழையினால் தென்பெண்ணையாற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக 4,321 குடும்பங்களைச் சேர்ந்த 6,601 ஆண்களும் 7,108 பெண்களும் 1,129 குழந்தைகள் என மொத்தம் 15,712 நபர்கள் மீட்கப் பட்டு 35 நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடலூர் மாவட்டம் மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி ஜி.எஸ்.மகாலில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் ஃபெஞ்சல் புயல் மழை காரணமாக தென்பெண்ணை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட கீழ்கவரப்பட்டு, கோழிப்பாக்கம், சின்ன பகண்டை, கொங்கராயநல்லூர் ஆகிய கரையோர ஊராட்சிகள் மற்றும் மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சியைச் சேர்ந்த பொது மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மேல்பட்டாம்பாக்கம் நிவாரண முகாமில் தங்கியுள்ள பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்து, அரிசி, மளிகை, பெட்ஷீட், புடவை உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

மேலும், கடலூர் புதுவை சாலையில் அமைந்துள்ள சின்னகங்கனாங்குப்பம், பெரிய கங்கனாங்குப்பம் பகுதிகளில் தென்பெண்ணை ஆற்று வெள்ள நீர் புகுந்ததால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிட்டும், புயல் மழை காரண மாக ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த புகைப்படங்களை பார்வையிட்டும் ஆய்வு மேற்கொண்டார். பெரியகங்கனாங்குப்பத்தில் நடைபெறும் மருத்துவமுகாமை பார்வையிட்டு ஆய்வு செய்து மருத்துவர்களிடம், முகாமிற்கு வருகைதரும் பொதுமக்களின் எண்ணிக்கை குறித்தும், எந்த வித மான மருத்துவ தேவைகள் உள்ளன என்றும் கேட்டறிந்தார்.

கடலூர் மாநகராட்சி மஞ்சக்குப்பம் விக்னேஷ் மகாலில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள தென்பெண்ணை ஆற்றின் வெள்ள நீரால் பாதிக்கப்பட்ட கடலூர் மாநகராட்சியின் திடீர் குப்பம், எம்.ஜி.ஆர் நகர், கே.டி.ஆர் நகர், பெண்ணையாற்று சாலை, தட்சிணாமூர்த்தி நகர், நேரு நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 1500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு துணை முதலமைச்சர் அவர்கள் அரிசி, மளிகை பொருட்கள், போர்வை, புடவை, கைலி உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

இயற்கை பேரிடரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் மாவட்ட நிர்வாகம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு பாராட்டு தெரிவித்து, பொது மக்கள் விரைவில் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப அனைத்து துறை அலுவலர்களும் அர்ப்பணிப்பு உணர்வுடன் தங்களுடைய பணிகளை தொடர்ந்து மேற் கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

தண்ணீர் வெளியேற்றப்பட்ட பகுதிகளில் உள்ளாட்சி நிர்வாகத்தினர் சுகாதார பணிகளை மேற்கொள் வதுடன், பொதுமக்களுக்கு மருத்துவ முகாம்கள் நடத்தி, மருத்துவ ஆலோசனைகளையும், மருந்து பொருட்களையும் வழங்குமாறும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளில் வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ. கணேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் அரூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்டு நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கு பேரூர் கழக செயலாளர் முல்லைரவி ஏற்பாட்டில் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் நிவாரணப் பொருட்களை வழங்கினார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் கிருஷ்ணகுமார்,பேரூராட்சி துணை தலைவர் சூர்யாதனபால்,உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் ஒன்றியத்தில் தொடர் மழையின் காரணமாக 4 வீடுகள் இடிந்து விழுந்து சேதாரம் ஆனது. இந்த தகவல் அறிந்ததும் தெற்கு ஒன்றிய செயலாளரும் முன்னாள் ஒன்றிய குழு தலைவருமான ஏ. விஜயகுமார் நேரில் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறி நிவாரணம் வழங்கினார். அப்போது வீராணம் ஊராட்சி மன்ற தலைவர் செல்வராணி ஆறுமுகம், கோரத்துப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் சுப்பிரமணி, பொருளாளர் பழனிவேல்,ஒன்றிய குழு உறுப்பினர் செந்தில்,கிளை கழக செயலாளர்கள் சரவணன்,ஜெகதீஷ், ஊராட்சி மன்ற உறுப்பினர் ரவிச்சந்திரன்,ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் ரத்தினம்,விஜய சங்கர், சங்கர்,மாதேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### பி.ஜிஆர்.ராஜாராமன் ஏற்பாட்டில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

# திருவாரூர் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் விளையாட்டுப் போட்டி - நலஉதவிகள்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா - பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவாரூர், டிச. 6 -

தமிழ்நாடு அரசின் துணை முதல்வர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, மன்னார்குடி சட்டமன்ற தொகுதியில், திருவாரூர் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் பி.ஜி.ஆர்.ராஜாராமன் ஏற்பாட்டில், சிறப்பு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா நடைபெறுகிறது.

மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில், தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா நிகழ்ச்சிகளை துவக்கி வைக்கிறார்.

டிசம்பர் 7 ம் தேதி, நீடாமங்கலம் வடக்கு ஒன்றியம், வி.பி.கட்டளை, புதுதேவன் குடி, பெரம்பூர், கோவில் வெண்ணி, காளச்சேரி, பொதக்குடி, ராயபுரம் ஆகிய ஊர்களில் உள்ள அரசு பள்ளிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல், டிசம்பர் 10 ம் தேதி நீடாமங்கலம் பேரூர் பகுதிகளில் எஸ்.ஆர்.வி.எஸ். பள்ளிக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் போட்டிகளில் வென்றவர்களுக்கு பரிசுகள் வழங்குதல்,

டிசம்பர் 14 ம் தேதி, நீடாமங்கலம் தெற்கு ஒன்றியத்தில் வடுவூரில் கபடி போட்டி, எடமேலையூர், எடை கீழையூர் பள்ளிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல், டிசம்பர் 17ம் தேதி கோட்டூர் தெற்கு ஒன்றியத்தில் கல்வெட்டுடன் கூடிய கொடிக்கம்பம் ஏற்றி, மாணவ மாணவிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்,

டிசம்பர் 21 ம் தேதி மன்னார்குடி மேற்கு ஒன்றியத்தில், மாநில மாவட்ட அளவில் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ - மாணவிகளுக்கு பரிசுகள் வழங்குதல் ,டிசம்பர்24 ம்தேதி மன்னார்குடி மத்திய ஒன்றியத்தில், மாவட்ட அளவில் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற சவளக்காரன் பள்ளி மாணவ - மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் உள்ளிட்ட நிகழ்வுகள் நடைபெற இருக்கின்றன.

நிகழ்வுகளை மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில், தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா நிகழ்ச்சிகளை துவக்கி வைக்கிறார்.

சிறப்பு அழைப்பாளர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், சட்டத் திருத்தக்குழு உறுப்பினர் பி. ராஜ மாணிக்கம், மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா.இளையராஜா, மன்னை நகர்மன்ற தலைவர் த.சோழராஜன், ஒன்றியக்குழு தலைவர் சோம.செந்தமிழ்ச்செல்வன், ஒன்றிய செயலாளர்கள் வீ. எஸ்.ஆர்.தேவதாஸ், பால. ஞானவேல் , டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரி சிவா, நா. கவியரசு, கே.வி.கே.ஆனந்த், நகர செயலாளர் வீரா.கணேசன் பேரூர் செயலாளர்கள் இரா.ராஜசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாவட்ட அமைப்பாளர் எம்.என். ராஜா , மாவட்ட துணை அமைப்பாளர்கள் வி.ஆர். என்.பன்னீர், ஜாகிர் உசேன், இளவரசன் விமல்ராஜ், கோபிநாத் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். மாவட்ட துணை அமைப்பாளர் எழில் வரவேற்கிறார். துணை அமைப்பாளர் பத்ம பிரசாத் நன்றி கூறுகின்றனர். அனைத்து நிகழ்வுகளையும் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பி.ஜி.ஆர். ராஜாராம் ஒருங்கிணைத்து நடத்துகிறார்.